# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.132/2019

2025 –ம் ஆண்டு அக்டோபர் மாதம் 07 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 07.10.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. செல்வகுமார் (DW–1) | வயது | : | 37/2025 |
| த/க பெயர் | : | திரு. கணேசன் | தொழில் | : | பொறியாளர் |
| முகவரி | | 54 நெம்மேலி | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் நான் படித்து பார்த்துதான் கையெழுத்திட்டேன் என்றால் சரிதான். நான் தற்போது எந்த ஊரில் வசித்து வருகிறேன் என்றால் 54 நெம்மேலி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் எங்கு வேலை பார்த்து வருகிறேன் என்றால் சென்னையில் பொறியாளராக வேலை பார்த்து வருகிறேன்.

2) வாதி முத்துக்குமரனிடமிருந்தோ அல்லது அவரது தகப்பனாரிடமிருந்தோ எந்தவித பதிவு பெற்ற ஆவணமும் எழுதி வாங்கி கொள்ளவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த விஸ்திரணம் எவ்வளவு என்றால் 0.28.5 ஏர்ஸில் 26 ஏர்ஸ்க்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன் தாவா சொத்தின் விஸ்திரணம் ஏதேனும் வேறுபாடு உள்ளதா என்றால் இல்லை.

3) தாவா சொத்தின் பத்திரம், பட்டா, சிட்டா அனைத்து வருவாய் ஆவணங்களும் வாதியின் பெயரில் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் வாதியின் பெயரில் தவறாக பதிவு ஏற்பட்டுள்ளது. வாதியின் பெயரில் பதிவு ஏற்பட்டுள்ளதை எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் 2019 ல் தெரியவந்தது.

வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வேண்டுமென கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.10.10 16:56:15 +0530

District Munsif
Mannargudi.